DEPOSITION OF WITNESS

**Chapter XXIII code of Criminal Procedure**

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 201 / 2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அம்பிகாபதி | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 27.06.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது காக்கழணி ஊரில் வசித்து வருகிறேன். இறந்து போன ஜயப்பனை எனக்கு தெரியும். அவர் எங்கு வேலை பார்த்தார் என்று எனக்கு தெரியாது. ரஜிபாணி, கௌதமி ஆகியோரை எனக்கு தெரியாது. 28.03.2021 தேதியில் ஜயப்பன் இறந்தார் அவர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. அவர் பிரேதம் இருந்ததை மருத்துவமனையில் பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் பிரேதவிசாரணை அறிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் மருத்துவனைக்கு சென்றேன் என்றும் அங்கு ஆய்வாளர் நடத்திய பிரேத விசாரணையில் கலந்து கொண்டு அதில் கையெழுத்து செய்தேன் என்றும், தற்சமயம் எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்று என்னுடைய கையெழுத்து இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

DEPOSITION OF WITNESS

**Chapter XXIII code of Criminal Procedure**

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 201 / 2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மதியழகன் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 27.06.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது காக்கழணி அருகில் உள்ள வங்காரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். இறந்து போன ஜயப்பனை எனக்கு தெரியும். அவர் எனது ஊர்முறையில் மருமகன் ஆவார். அவர் எங்கு வேலை பார்த்தார் என்று எனக்கு தெரியாது.அவர் இறந்த தேதியும் எனக்கு தெரியாது. எனக்கு முன்பு சாட்சி சொன்ன வேலாயுதத்தை எனக்கு தெரியும். ரஜிபாணி, கௌதமி ஆகியோரை எனக்கு தெரியாது. நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. பிரேத பரிசோதனை செய்யும் போது ஊர் காரன் என்ற முறையில் நான் கையெழுத்து போட்டேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

DEPOSITION OF WITNESS

**Chapter XXIII code of Criminal Procedure**

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No. 201 / 2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேலாயுதம் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 27.06.2024

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது காக்கழணி, காலனி தெரு முகவரியில் வசித்து வருகிறேன். இறந்து போன ஐயப்பன் முறைக்க தம்பி ஆவார். அவர் எங்கு வேலை பார்த்தார் என்றும் தெரியவில்லை. எனக்கு ரஜிபாணி, கௌதமி ஆகியோரை தெரியாது. இறந்து போன ஐயப்பன் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. இறந்து போன ஐயப்பனை பிரேத பரிசோதனை செய்ய அழைத்தார்கள் அப்போது கையெழுத்து போட நான் சென்றேன். நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் கையெழுத்து வாங்கியவர் காவல் ஆய்வாளர் ஆவார். மேற்படி காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>** -இல்லை.